16-08-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இந்திய அமெரிக்க உறவுகள்**

**தொடக்க உரையாடல் : தெ. ஞா. மீநிலங்கோ**

இந்திய சுதந்திரமடைந்தது முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் இந்திய -அமெரிக்க உறவுகளை தீர்மானிக்கும் சக்தியாக இந்திய - சோவியத் யூனியனுடனான உறவுகள் அமைந்திருந்தன. குறிப்பாக கெடுபிடிப்போர் உச்சத்தில் இருந்த காலப்பகுதியில் இந்திய - அமெரிக்க உறவென்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் அதேநேரம் பகைமையில்லாத இருந்தது. நேரு அணிசேராக் கொள்கையை இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையாக கொண்டிருந்ததன் மூலம் கெடுபிடிப்போர் காலகட்டத்தில் ஒருவகையான இரட்டறுநிலையை இந்தியா கொண்டிருந்தது. இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின் போது அமெரிக்கா பாகிஸ்தானுக்கே ஆதரவு தெரிவித்தது. அதேவேளை இந்தியாவின் கைத்தொழிற்றுறை வளர்ச்சியிலும் ஆயுத விற்பனையிலும் சோவியத் யூனியன் முக்கிய பங்காளியாக இருந்தது. இக்காலகட்டத்தில் இந்தியாவின் வளர்ச்சியில் அமெரிக்கா மிகக்குறைந்தளவே பங்காற்றியது. அமெரிக்கா இந்தியாவை தனது சந்தையாக மட்டுமே பார்த்தது.

சோவியத் யூனியனின் உடைவின் பின்னான காலப்பகுதியில் இந்திய -அமெரிக்க உறவுகள் நல்ல நிலையை அடைந்தது. உலகப் பொலிஸ்காரானாக அமெரிக்க மாறியதன் விளைவால் இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை பேணிவந்தது. 1997 இல் இந்தியா பொக்ரானில் அணுகுண்டுச் சோதனையைச் செய்தது இந்திய - அமெரிக்க உறவில் மிகப்பெரிய விரிசலை உண்டாக்கியது. அமெரிக்கா இந்தியாவிற்கெதிராக பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஆனால் இந்தியாவின் தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் வளர்சியின் விளைவால் அமெரிக்கப் பொருளாதாரத் தடை பாரியதாக்கத்தைச் செலுத்தவில்லை. இதனால் 2001இல் அமெரிக்கா இந்தியா மீதானான பொருளாதாரத் தடையை நீக்கியது.

9/11 இன் பின்னணியில் அமெரிக்கா முன்னெடுத்த பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் இந்தியா அமெரிக்காவின் பங்காளியாகியது. அதைத் தொடர்ந்துவந்த காலப்பகுதியில் இந்திய - அமெரிக்க உறவானது நல்ல நிலையிலிருந்தது.

"அமெரிக்க - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை சாத்தியமாக்கிய ஒரே காரணி எல்லோராலும் "சீனமிரட்டல்" என்று சொல்லப்படுகின்ற பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் சீனாவின் தவிர்க்கவியலாத வகிபாகமாகும்"

2004ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட அமெரிக்க - இந்திய அணுசக்தி ஒப்பந்தம் இந்திய - அமெரிக்க உறவில் ஒரு புதிய பரிமாணமாகும். அணுஆயுத சக்தியை உடைய நாடுகளை ஒப்பந்தங்களினூடு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் அமெரிகாவின் திட்டத்தில் இந்தியா பங்காளியானது. இதன் மூலம் இந்தியா தனது அணுசக்தித் திட்டத்தை சர்வதேச அணுசக்தி முகவராண்மையகத்தின் (IAEA) மேற்பார்வையை அனுமதித்தது. அடிப்படையில் இது இந்தியாவின் இறைமைக்கு சவால்விடுக்கின்ற ஒன்றாக இருந்த போதும் ஆட்சியாளர்களிடையேயான "அமெரிக்க விசுவாசம்" இதை சாத்தியமாக்கியது.


இன்றைய நிலையில் இந்திய - அமெரிக்க உறவின் முக்கியமான அம்சமாக பாதுகாப்பு ஒத்துழைப்பு விளங்குகிறது. அமெரிக்க - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை சாத்தியமாக்கிய ஒரே காரணி எல்லோராலும் "சீனமிரட்டல்" என்று சொல்லப்படுகின்ற பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் சீனாவின் தவிர்க்கவியலாத வகிபாகமாகும்.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**இலங்கையில் பங்குச்சந்தையில் ஏற்பட்ட சரிவின் பின்னணிகள்**
அச்சுதன் சிறீரங்கன் | 23-08-2012

**உலக வங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும்**
த. வி. ரெஷாங்கன் | 30-08-2012



லியோனிடு ஹுர்விக்ஸ்

**லியோனிடு ஹுர்விக்ஸ்** (Leonid Hurwicz, **ஆகஸ்ட்** 21, 1917 - **ஜூன்** 24, 2008) ஒரு புகழ்பெற்ற பொருளியல் அறிஞர். இவர் 2007 ஆம் ஆண்டுக்கான பொருளியல் நோபல் பரிசை பேராசிரியர் எரிக் மாஸ்க்கின், பேராசிரியர் ரோஜர் மையெர்சன் ஆகியோருடன் சேர்ந்து வென்றார். பேராசிரியர் ஹுர்விக்ஸ் மின்னெசோட்டா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து ஒய்வு பெற்றவர். நோபல் பரிசு பெற்றவர்களிலேயே அகவை அதிகம் உள்ளவர் இவர்தான். தனது 90 ஆவது அகவையில் நோப்ல பரிசு பெற்றுள்ளார்.

இவர் பொருளியல், அரசியலறிவியல், குமுக அறிவியல் (சமூக அறிவியல்) ஆகிய துறைகளில் பயன்படும் முடிவுக்கேற்ற திட்டவகுதி (மெக்கானிசம் டிசைன்) என்னும் கருத்தை முன்வைத்தவர் என்றும், கேம் தியரி என்னும் மிகைமப் பகிர்வுக் கொள்கையை பொருளியலில் பயன்படுத்திய முன்னோடி என்றும் கருதப்படுகின்றார்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இந்திய அமெரிக்க உறவுகள்

**முன்பக்கத் தொடர்ச்சி..**

இந்த அடிப்படையிலே சீனாவைப் பொது எதிராகக் காண்பதன் மூலம் இந்திய - அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு என்பது அமைகின்றது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் அமெரிக்க தனது அதிநவீன ஆயதங்களை இந்தியாவுக்கு விற்கவோ இந்தியா அமெரிக்காவிடம் வாங்கவோ இல்லை. இன்று இந்தியாவுக்கு ஆயதம் வழங்குகின்ற நாடுகளாக ரஷ்யாவும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுமே விளங்குகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை நம்பிக்கையான ஆயத விற்பனை நாடுகளாக இவை விளங்குகின்றன. அமெரிக்க ஆயதங்களின் அதிக விலை, தொடர்ச்சியான விநியோகம் செய்யும் என்ற நம்பகத்தன்மை இன்மை என்பவை இந்தியா அமெரிக்காவிடம் ஆயதக்கொள்வனவை மேற்கொள்ளாமைக்கான காரணங்களாகும்.

இந்திய - அமெரிக்க உறவின் தன்மையையும் ஆழத்தையும் நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக பாகிஸ்தான் அமெரிக்க உறவு இருக்கிறது. அமெரிக்காவால் தென்னாசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தானை பயன்படுத்தி தான் விரும்பியவற்றையெல்லாம் சாதிக்கமுடியும் என்றால் இந்திய - அமெரிக்க உறவின் அளவு மிகவும் வலுவற்றதாகவே இருக்கும். பாகிஸ்தான் அமெரிக்காவின் தாளத்திற்கு ஆட மறுக்கின்ற வேளைகளில் அமெரிக்கா இந்தியாவுடன் நெருங்கும். அதன் மூலம் தனது தேவையை இந்தியாவின் உதவியோடு நிறைவுசெய்வதோடு பாகிஸ்தானுக்கு மறைமுகமான அழுத்தத்தையும் கொடுக்கிறது. ஒருவகையில் இந்திய - அமெரிக்க உறவின் தீர்மாகரமான சக்தியாக பாகிஸ்தான் விளங்குகிறது.

"தென்னாசியப் பூகோள அரசியலில் இந்திய அமெரிக்க உறவென்பது இரு நாடுகளுக்கு இடையிலான போட்டியையே மையப்படுத்துகிறது. இன்று இலங்கை, நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளில் மேலாதிக்கம் செலுத்துவதற்கான போட்டி இந்தியா அமெரிக்கா இடையானதே."

அமெரிக்காவின் ஆப்கானிய யுத்தத்தைத் தொடர்வதற்கு அமெரிக்காவிற்கு இந்தியாவின் பங்கு தேவைப்படுகிறது. இந்திய - அமெரிக்க நாடுகளுக்கிடையே 2010 முதல் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மூலோபாய உரையாடல்களின் (Strategic Dialogue) அடிப்படையாக ஆப்கானில் இந்தியாவை ஈடுபடுத்துவதே இடம்பெறுகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை 2014 இல் அமெரிக்கப் படைகள் ஆப்கானிலிருந்து முற்றாக வெளியேற அமெரிக்கா வகித்த பங்கை இந்தியா வகிக்க வேண்டும். ஒருவகையில் அமெரிக்காவின் அடியாள் வேலையை இந்தியா பார்க்கவேண்டும். அமெரிக்க பாதுகாப்புச் செயலரின் சொற்களில் சொல்வதானால் 'ஆப்கான் இனி எங்களது பிரச்சனையல்ல உங்களது பிரச்சனை".

அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கை முடிவுகளில் தாக்கம் செலுத்துகிற இதழானது வாசிங்டன் டெல்லியிடம் எதிர்பார்க்கும் 10 விடயங்களை பட்டியலிடுகிறது.

1. சீனாவுடனான சண்டைக்குத் தயாராக இருத்தல்.

2. இந்து சமுத்திரத்தில் சில்லறைச் சண்டைகள் செய்தல்

3. ஆப்கானிஸ்தான் மாற்றத்தில் உதவுதல்

4. ஈரானுக்கு அழுத்தம் கொடுத்தல்

5. "நல்ல" நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கல் ("நல்ல" என்பது அமெரிக்க சார்பானது என்று பொருள்படும்)

6. தென்கிழக்காசியாவின் அலுவல்களில் பங்குவகித்தல்

7. பாகிஸ்தானுடன் தொடர்ந்து சொறிதல்

8. பொருளாதார ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்

9. தொடர்ச்சியான இராணுவக் கூட்டுப்பயிற்சிகளை மேற்கொள்ளல்

10. அமெரிக்காவிடம் ஆயதம் வாங்குதல்

தென்னாசியப் பூகோள அரசியலில் இந்திய அமெரிக்க உறவென்பது இரு நாடுகளுக்கிடையிலான போட்டியையே மையப்படுத்துகிறது. இன்று இலங்கை, நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளில் மேலாதிக்கம் செலுத்துவதற்கான போட்டி இந்தியா அமெரிக்கா இடையானதே. நேபாளத்தில் அமெரிக்கா - இந்திய சதுரங்கம், மாலைதீவு ஆட்சிக்கவிழ்ப்பில் இந்தியாவின் பங்கு மற்றும் ஆட்சி கவிழ்க்கப்பட்டவருக்கு அமெரிக்க ஆதரவு என்பன இந்திய - அமெரிக்க போட்டியை எடுத்துக்காட்டும் மிக அண்மைய உதாரணங்கள்.

சீனாவும் ரஷ்யாவும் வேகமாக வளர்ந்து வரும் நிலையில் ஆசியப் பிராந்தியத்தில் "ஆசியாவின் நேட்டோ"வை உருவாக்க அமெரிக்க விளைகிறது. இதில் முக்கியபங்காற்ற இந்தியா அழைக்கப்பட்டாலும் அடிப்படையில் உருவாக்காப்படவிருக்கும் கூட்டமைப்பு இந்தியாவிற்கும் அச்சுறுத்தலானதே. இந்தியா - அமெரிக்கா உறவை ஒரு வரியில் சொல்வதானால் "கசந்தும் கசக்காத உறவின் அடிப்படையிலான போட்டி" எனலாம்.



### இலங்கையில் பங்குச்சந்தையில் ஏற்பட்ட சரிவின் பின்னணிகள்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

* பங்குச்சந்தை பற்றிய அறிமுகம்.

* இலங்கையின் பங்குச்சந்தை

* இலங்கைப் பங்குச்சந்தையின் தற்கால நிலவரமும் அதன் பின்னணிகளும்

* எதிர்காலம்

* பங்குச்சந்தையில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA